**OS.No.255/2023, Dated 18.02.2026**

The witness sworn under Oaths Act 1969 on this the day of 18th day of February 2026.

**வா.சா.1 – வெங்கடேசன் த/பெ. கிருஷ்ணமூர்த்தி வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வழக்கு சொத்துக்கள் எனது தந்தை கிருஷ்ணமூர்த்தி வாங்கியவை என்றால் சரிதான். எனது தந்தை அவரது சொந்த கிராமமான கோட்டுப்பாக்கத்தில் தான் இருந்தார். நான் எனது பணிக்காக செய்யாறில் உள்ளேன். நான் 33 வருடங்களாக செய்யாறில் தான் உள்ளேன். எனது தகப்பனார் எதற்காக எனக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் எனக்கு சொத்துக்கள் கிடைக்க வேண்டுமென்று உயில் எழுதி வைத்தார். எனது தகப்பனார் பிரதிவாதிகளுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். எனது தாயாரும் அவர்களுடன் இருந்தார். எனது தகப்பனார் இறந்தது மற்றும் அடக்கம் செய்தது கோட்டுப்பாக்கத்தில் தான். எனது தகப்பனாரின் இறப்பு செலவிற்கு செலவு செய்தது எனது தம்பி தான் என்றால் சரியல்ல. செல்வி எனது தங்கை ஆவார். தாவா 1வது அயிட்ட சொத்தை செல்வியிடம் நான் பணம் எதுவும் கொடுக்காமல் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் சந்தை மதிப்பின் படி பணம் கொடுத்து தான் வாங்கினேன். எனது தந்தை 2007ம் ஆண்டு காலமானார். வழக்கு சொத்துக்களின் வருவாய்துறை ஆவணங்கள் எனது தகப்பனார் பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் எனது தகப்பனார் பெயரில் தான் இருந்தது. தற்போது தான் எனது பெயரில் 8 மாதங்களுக்கு முன்பு மாற்றப்பட்டது. நான் முதல் விசாரணை செய்யப்படுவதற்கு முன்பே வருவாய் துறை ஆவணங்கள் எனது பெயரில் மாற்றப்பட்டு விட்டன. அந்த பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் அ பதிவேடுகளை என்னால் தாக்கல் செய்ய முடியும். 17.05.2018 அன்று நான் தேசூர் காவல் நிலையத்தில் நிலம் சம்பந்தமாக நான் புகார் கொடுத்தேன். போலீசார் சரியான முறையில் விசாரிக்கவில்லை. நீதிமன்றத்தை அணுகும்படி சொல்லிவிட்டார்கள். ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.78/2018 வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.18 14:18:27 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி